# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 6541/A/2024

திரு. மு. தங்கமுத்து -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் PEW, (I/C),
தலைமையிடம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. மு. தங்கமுத்து அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு. V. ஆறுமுகம்<br>பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், PEW, (I/C) தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 30.11.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் என்பவர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, உயர் மின் கோபுரம் அமைக்கும் போது வெட்டப்பட்ட பனை தென்னை மரங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மோசடி செய்தது தொடர்பாக 09.11.2023 ல் அளிக்கப்பட்ட புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விபரம் மற்றும்அதற்கான ரசீது எப்போது வழங்கப்படும் என்பது போன்ற விபரங்களை தெரிவிக்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 27.12.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 30.12.2023 |

| | |
|---|---|
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 25.01.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 17.05.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு. V. ஆறுமுகம், பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 1147/2023, 27.12.2023 மற்றும் 62/2024, 28.09.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், 01/2024, 25.01.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனது நிலத்தில் உயர்மின் கோபுரம் அமைக்கும்போது வெட்டப்பட்ட பனை, தென்னை மரங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகையை மோசடி செய்து விஸ்வநாதன் என்பவர் போலி ஆவணங்களை பயன்படுத்தி பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து, அதனை மீட்டு வழங்கக்கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரர் தனது பெயரில் உள்ள இடம் என்பதற்கான ஆவணங்கள் எதையும் பொதுத்தகவல் அலுவலரிடம் சமர்ப்பிக்கவில்லை என்பது தெளிவாகிறது. எனவே இன்றைய விசாரணயின் முடிவின் பின்வருமாறு ஆணையம் உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரர், தனது புகாரில் தெரிவித்து இடம் தொடர்பான அசல் ஆவணங்களை கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்களிடம் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனது புகாருக்கு பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.***
- ***பொதுத்தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் மனுதாரரிடமிருந்து ஆவணங்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6541/A/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
PEW, (I/C) தலைமையிடம்,
திருப்பூர் மாவட்டம் - 641 603.

**<u>மனுதாரர்</u>**
திரு. மு.தங்கமுத்து
தங்காய்புதூர்,
மருதுரையான்வலசு அஞ்சல்,
திருப்பூர் - 641 604.

Copy to file

KRM/PA 02.07.2026